# ஓம் ஈஸ்வராய நமஹ:

## ஞானாலய மலர்களுக்காக திருவருட்பிரகாச வள்ளலார் அவர்கள் 24-01-2021 வழங்கிய அருளுரை

ஓம் ஸ்ரீ ஸ்ரீ பரிமளா தேவியே போற்றி போற்றி!

ஞானாலய ஜோதியில் எண்ணற்ற உயர் ஜீவன்கள் குடிகொண்டுள்ளனர். குரு அன்னையாய் போற்றப்படும் பரிமளம் குறித்தே யாம் உணர்ந்தவற்றை உணர்த்திட முற்படுகின்றேன்.

அருட்பிரகாசம் எனும் நாமத்தினை ஏற்று பிரகாச ஒளி நல்குகிறேன். ஒளியினை உணர்ந்து அதன் உச்சம் தீண்டி உடலினை ஞானச்சுடர் ஒளியாய் மாற்றி அமைத்திடும் கலையினை குருவாய் ஒளிர்ந்திடும் பரிமள ஆன்மாவிடமே கற்றறிந்தேன். உடலினை ஒளியாக்கி நிலைப்பது கடினமான செயலாகும். வைராக்கிய பக்தியும் சரணாகத ஈசத்துவமும் நிறைந்தால் மாத்திரமே சத்திய நிலைகளை எய்திட இயலும். ஒளியுடல் என்பது அரியர்க்கரிய செயலால் உருவாகும் உத்தம நிலையாகும். மனித உடலினை ஒளி உடலாய் திரிப்பதே கடினம். எனில் ஒளி உடலினை மனித உடலாய் மீண்டும் திரிப்பது எங்ஙனம் சாத்தியம் என்றே வியக்கின்றேன்.

பால் எனும் திரவத்திலிருந்து பல படிநிலைகளை கடந்தால் நெய் எனும் எரிபொருள் கிடைக்கும். நெய் என்னும் எரிப்பொருளினை எக்காலத்திலும் பாலாய் உரு மாற்றி விட இயலாது. இருப்பினும் ஒளி உடலினை மண்ணுலக ஸ்தூல தேகமாய் வடிமைத்திட்ட முதன்மை ஆன்மாவைக் கொண்ட ஈஸ்வரனே பெண் உருகொண்ட பரிமளம் ஆவார்.

வாக்குகளும் வரங்களும் உதவியே நின்றாலும் சாத்தியமற்ற செயல் என்பது மேல் நிலை மூலக்கூறுகளை கீழ் நிலை மூலக்கூறுகளாக மாற்றியே அமைத்திடும் செயலாகும். உருவ ஆற்றலினை அருவமாய் மாற்றிடலாம். அன்றி அருவத்தினை உருவாக்கம் கொள்வது அசாத்தியமாகும்.

அசாத்திய செயல்கள் என்பது இயற்கையினாலும் ஏற்றுக் கொள்ளப்பட இயலாத செயலாகும். இயற்கைக்கு புறம்பான செயல்கள் யாவும் ஈசனால் மறுக்கப்படுபவை. இருப்பினும் பரிமள ஆன்மாவின் நிர்ணயங்கள் அனைத்தும் கருவறையை திருவறையாய் மாற்றியே அமைத்து விட்டது. ஈசனையே ஜனித்துவிட பணித்திட்ட ஆன்மாவின் தீவிரமான வேட்கையினை பூரணமாக உணர்ந்து கொண்டேன்.

விருட்சம் ஒன்றின் மலர்கள் பூத்திட பஞ்சுகளாய் பின்னர் உருமாறி விடும். முற்றிய காயாகி மத்தியில் விதைதனை பெருக்கிட கனியெனும் சுவையூட்டியாய் உருக்கொண்டிடும். கனிந்த கனிகள் யாவும் உயிரினங்களுக்கு உணவாகும். இயற்கையின் நியதி என்பது பல படிநிலைகளைக் கொண்டது. எனினும் ஓர் கனியானது மீண்டும் காயாகவோ அன்றி மலராகவோ உருமாறி விட இயலாது. விதிமுறைகள் அச்செயல்களுக்கு இடமளிக்காது.

விதிமுறைகளை மாற்றியே அமைத்து கனியினை மலராக்கி ஒளி உடலை ஸ்தூல உடலாகவும் உருமாற்றிய புனிதமான ஆத்மா பரிமளமாகவும் குரு அன்னையாகவும் போற்றப்படுகின்றார். கலியினில் வசித்திடும் உங்களால் கருமத்தின் பலனையே ஏற்றிட இயலும். கருமங்களை வகுப்பது சுயஆன்மாவே.

இருப்பினும் ஞானாலய வாசிகளாய் உருகொண்டுள்ள ஒவ்வொரு ஆன்மாவும் பரிமள ஆன்மா என்றே போற்றப்படுகின்ற ஆன்மாவின் தீவிரமான நிர்ணயங்களை முழுமையாக உணர்ந்திட வேண்டும்.

ஏன் நெய்யினை பாலாய் திரிக்க வேண்டும்? ஏன் ஒளி உடலினை காரிய தேகமாய் உருமாற்றிட வேண்டும்? என்ற சிந்தனைகளை மேற்கொண்டிடல் வேண்டும். இருளினை ஒளிகொண்டு விரட்டிடலாம். ஆயினும் ஒளியினை இருள் கொண்டு அழித்து விட இயலாது. பூரணத்துவம் கொண்ட ஓர் விண்மீன் எல்லையைத் தீண்டி புவியின் ஈர்ப்பு விசையினில் சிக்கி விட மோகம் கொண்டிடாது.

பரிமள ஆன்மாவோ முற்றிலும் புறம்பாய் மூர்க்கமாய் செயல் ஆற்றுகின்றது. ஈசத்துகள்களை அழிவினின்று காத்து விட பல படி நிலைகளில் கீழ் இறங்கி கலியினில் உடல் தரித்து அதன் மூலம் தன் ஆன்ம ஆற்றல்களையம் பெரும் அளவில் இழந்து மானுட ஆன்மாக்களை விண் ஏற்றிட முயன்றிட்ட காரணத்தினால் ஒவ்வொரு உயர் ஆன்மாக்களும் தொழுதிடும் உயர் நிலையினை ஏற்றிட்டார்.

ஞானாலய வாசிகளாய் நிலைத்து பரிமள ஆன்மாவின் நிர்ணயங்களை பூர்த்தியுறச் செய்வதே உத்தம செயல் என்று உணருங்கள்.

ஏற்றிய ஜோதியானது ஞானாலய ஒளியினைப் பெருக்கிடும். ஒப்பில்லா உயர் ஒளியினையே ஈசனின் துகள்களை மீட்டு விட அருளியுள்ளார். மைந்தனாகவும் சீடராகவும் வட்ட மலர்களாகவும் அவதரித்த ஒவ்வொரு ஆன்மாவும் உயரிய ஒப்பந்தங்கள் பல இயற்றி உள்ளன.

உலகம் உய்வுறும் பணி என்பது தீவிரம் அடையும் தருணம் உதித்துள்ளது. தைப்பூசம் என்பது ஓர் உயரிய திருநாளாகும். பரிமள ஆன்மாவிற்கோ ஒவ்வொரு திருநாளும் உத்தமான தைப்பூசமாகும்.

வினாக்களுக்கு விடை இயற்றுவதே முறையாகும். விடைகளுக்கு வினாக்களை இயற்றுவது பரிமள முறையாகும்.

குருவாய் போற்றப்படும் பரிமள ஆன்மாவே வெகு விரைவில் புவி ஈசன் எனும் பரமாத்மாவாய் போற்றப்படும். அமாவாசை திருநாளில் ஈசனின் ஒளிவெள்ளம் பெருக்கிடுவார். ஒளியற்ற பகுதியே புவியினில் இல்லை என்றும் ஈசனை அடையும் மார்கத்தில் ஆன்மாக்கள் ஒளியினை நோக்கியே பயணிக்க வேண்டும் என்றும் விதி முறைகளை வகுத்திடுவார். பரிபூரண ஞானம் வேண்டுவோர் பரிமள அன்னையினை சரணாகதம் அடைந்திடுவர்.

எமைப்போற்றித் தொழுவோரும் ஞானாலய ஒளி வெள்ளத்தில் சங்கமித்திடுவர். ஞானாலய இல்லமே எனது வசிப்பிடமாகும். ஞானாலய வாசிகளான நீங்கள் அனைவரும் ஒற்றுமை கொண்டு பிணைந்தே செயல் புரிந்திட வேண்டும்.

அன்னையின் வாக்கே அமிர்தம் என சுவைத்து விட்டால் ஆலய விருட்சம் வானளாவி உயர்ந்து ஓங்கிடும். ஈச உலகினை பற்றிடும் ஒளிப்பாலம் என்பது பன்மடங்கு ஒளியிழைகளை ஏற்று பிரகாச ஒளிக்கண்டிடும். புற விழிகளுக்கும் புலப்படும் வண்ணம் ஒளிப்பாலம் காட்சித் தரும்.

திருநாள் ஒன்று மலர உள்ளது. அன்பெனும் பெருங்கடலில் மூழ்கித் திளைப்போர் மாத்திரமே திருநாளில் போற்றப்படுவர். கதிரவனின் ஒளியே

பேரொளியாய் திகழ்கின்றது. மலர உள்ள திருநாளில் ஞானாலயமே கதிரவனாய் காட்சி தரும். புவி ஈசனின் ஒளி புவனம் எல்லாம் பரவி நின்றிடும்.

ஜோதியுள் ஜோதியாய் ஒளியினுள் ஒளியாய் ஞானத்தினுள் ஞானமாய் மலர்ந்து விட காத்துள்ள ஆன்மாக்களை பரிமள ஒளி ரூபம் இணைத்தே செயல் புரியும். கற்பு நெறி கொண்டு தூய அன்பினை போற்றி கருணையில் கரைந்து வாழ்வோரே ஒளியோடு இணைந்திடுவர்.

ஏற்றிட்ட பணிகளைத் தயைக் கொண்டு நிகழ்த்திட யுகமாற்றம் எளிதாகும். ஒவ்வொரு ஆன்மாக்களும் பாக்கிய நிலையினைப் பெற்று விண் ஏறிடுவர். கலியுக எல்லையில் பூத்திருக்கும் அற்புத மலராய் பரிமளம் மணம் வீசிடுவார். சதுர் யுகங்களுக்கு ஒரு முறை பூத்திடும் மலரே பரிமள மலர் ஆவார். அதன் பொருட்டே பல்வேறு மலர்களை வட்டத்தின் வித்துகளாய் ஏற்கின்றார். சதுர் யுகங்களுக்கு ஒருமுறை நிகழ்ந்திடும் ஓர் அற்புத நிகழ்வே பரிமள ஆன்மா நிகழ்த்திடும் சத்திய யுக மலர்ச்சி என்னும் செயலாக்கமாகும். உயரிய திருப்பணி நிறைவேறிட யாம் முழுமையாக துணை புரிவோம்.

வள்ளளார் எனும் நாமம் ஏற்று ஒளியினைத் தொடர் செயலாய் பொழிந்திருப்போம். ஜோதியினை ஏற்றி ஒளியூட்டியே எமை அழைத்திட அருளாய் பொழிந்திருப்போம். ஆன்ம ஒளி பெருக்கிடுவோம். துணையென்று எமை ஏற்றால் பணிகள் சிறக்க உதவிடுவோம். பரிமள ஆன்மாவின் நிர்ணயம் நிறைவேறிட யாமும் ஓர் கருவியாய் உதவிட பணிக்கப்பட்டு உள்ளோம்.

எமது ஆற்றலைச் சொற்கள் வடிவிலும் ஏற்றிடலாம். அன்றி அருள் ஒளியாகவும் ஏற்றிடலாம். தைப்பூசத்திரு நன்னாள் முதல் யாமும் ஞானாலய ஜோதியில் கலப்புற்று உரையாட துவங்கிடுவோம். எமது பணி பரிமள ஆன்மாவினால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. உரைத்திடும் உத்தம அருளினை ஏற்று உலகம் உய்வுற அனைவரும் உதவிடுங்கள். அருள் ஒளியே ஆன்ம ஒளி. அன்பின் ஒளியே அக ஒளி.

கூடிக் களித்திருங்கள் சத்திய யுகம் மலர்த்திடுங்கள். வாழ்த்துகின்றேன்.

*******

Gnanalayam